### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலை! கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

# நாளை - தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு!

## கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஜன. 25 -**

**26.01.2026 திங்கட்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு முன்னிலையில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

இதுகுறித்து தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மகளிர் மேம்ப்பாட்டுக்கென தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து, 1.31 கோடி மகளிருக்கு 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்', கல்வி கற்கும் மாணவிகளுக்கு 'புதுமைப் பெண் திட்டம்', வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான 'தோழி விடுதி', இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில், கடந்த 29.12.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், "பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ" என்று சொல்லத்தக்க வகையில், "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு கறுப்பு சிகப்பு மகளிர் அணி படையின் மாபெரும் எழுச்சியோடு வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து;

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட - கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் முன்னிலையில், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன், மகளிர் அணிச் செயலாளர் திருமதி ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் பங்கேற்பில்;

வருகிற ஜனவரி 19 அன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தி.மு.க. டெல்டா மண்டல மகளிர் அணி மாநாடு 26.01.2026 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணி அளவில் நடைபெறும்.

மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்களான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, எஸ்.ரகுபதி, சி.வி.கணேசன், பூண்டி கே.கலைவாணன், எம்.எல்.ஏ., காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., க.வைரமணி, க.அன்பழகன் எம்.எல்.ஏ., வீ.ஜெகதீசன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லபாண்டியன், என்.கௌதமன், டி.பழனிவேல் அமைச்சர் பெருமக்களான கோவி.செழியன், சிவ வீ.மெய்யநாதன், டி.ஆர்.பி.ராஜா - நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.கல்யாணசுந்தரம், அருண்நேரு எம்.பி., முரசொலி எம்.பி., மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் இம்மாநாட்டினை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்வார்கள்.

நிறைவாக, தஞ்சாவூர் மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

இவ்வாறு தலைமைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நாளை மகளிர் அணி மாநாடு நடைபெறுகிறது.

---

### கழகத்தினர் – மாணவர் அணியினர் திரளாக கலந்துகொள்வீர்!

## நீலகிரி மாவட்டம், கூடலூரில் வீர வணக்கநாள் பொதுக்கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ அறிக்கை!

*நீலகிரி, ஜன. 25 -*

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆதிக்க இந்தியை எதிர்த்து, நம் தமிழ் மொழிக்காக போராடி உயிர்நீத்த மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்துகின்ற வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 25ம் தேதி நீலகிரி மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடத்தப்படும் வீர வணக்கநாள் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது. அதேபோல், இந்த ஆண்டு கூடலூர் காந்தி திடலில் நடைபெற உள்ளது.



கூட்டத்தில் தலைமை கழக அறிவிப்பின்படி, மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, தலை மைக் கழக பேச்சாளர் கோணூர் வீரமணி, இளம் பேச்சாளர் தஸ்லிமா நஸ்ரின் ஆகியோர் சிறப்புரை யாற்ற உள்ளனர்.

தமிழ் மொழி காத்திட வேண்டும் என்கிற கொள்கைக்காகவே வாழ்ந்த நம் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில், நம்மை வழி நடத்தும் கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படி, மொழிக்காக உயர்நீத்த தியாக மரவர்களுக்கு வீரவணக்கம் செலுத்திடும் நாளை அனுசரித்திப்பது நம் அனைவரின் கடைமையாகும்.

எனவே, இன்று (ஜனவரி 25 ஞாயிற்றுக்கிழமை) கூடலூர் காந்தி திடலில் நடைபெறும் வீர வணக்க நாள் பொதுக் கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய,பேரூர்க் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கிளை கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெரும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்திட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### ஒரே ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகள் அறிவித்து

## அதே ஆண்டில் செயல்படுத்தி சாதனை படைத்தவர் முதல்வர்!

### பேரவையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் பேச்சு!

சென்னை, ஜன.25 -

தமிழ்நாட்டில் ஒரே ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கி, அதே ஆண்டில் அவைகளை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து சாதனை படைத்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று சட்டப்பேரவையில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

அமைச்சர் கோவி. செழியன் பேசியது வருமாறு:-

'கல்வியில் சிறந்த தமிழ் நாடு' என்ற சொற்றொடரை செயல் வடிவமாய் காட்டி இந்தியாவில் உயர்கல்வியில் முதலிடம் தமிழ்நாடு என்ற பெருமையை தமிழகம் தொடர்ந்து தக்கவைத்து வருகிறது. இந்த நிலையில் 20242025 ஆம் நிதி ஆண்டில் பண்ருட்டியில்டு முதலமைச்சர் அவர்கள் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று பொதுமக்கள் முன்னிலையிலேயே பண்ருட்டிக்கு அரசு கலைக் கல்லூரி வரும் என அறிவித்தார்.

அதை தொடர்ந்து 10 கல்லூரிகள், அதை தொடர்ந்து 5 கல்லூரிகள் ஒரே ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகளை ஏழை, எளிய நடுத்தர மாணவர்கள் படிப்பதற்கு தந்த தலைவர் தமிழக முதலமைச்சர் திராவிட மாடல் முதல்வர் அவர்கள்.



பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி 16 கல்லூரிகளும் சட்டப்பேரவையில் அறிவிப்பார்கள். அடுத்தடுத்த ஆண்டு துவக்குவார்கள். ஆனால், நான் அறிந்தவரை சட்டப்பேரவையில் அறிவித்து, அந்த ஆண்டே தற்காலிக இடம் தேர்வு செய்து, வகுப்புகள் தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை முடிந்து, நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்து நிரந்தர கட்டடம் கட்டுவதற்கும் 16 கல்லூரிகளில் 11 கல்லூரிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்த பெருமை தமிழக முதலமைச்சர் அவர்களை சாரும்; தமிழக அரசை சாரும். உறுப்பினர் சொன்ன கோரிக்கையை ஏற்று நிதி ஒப்படைப்பு செய்தாகிவிட்டது.

இட தேர்வில் வருவாய் துறை அமைச்சர் அவர்களும், வேளாண் துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி முடிவெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துசென்று அதை செய்து தருவோம் என்ற உத்தரவாதத்தை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோ.வி.செழியன் பேசினார்.

---

## வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. சிறப்புரை!

*வேலூர், ஜன.25 -*

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம் நேற்று (24.01.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காட்பாடி எஸ்.ஏ. மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானா அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில் விவாதிக்கப் பட்டது.

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்குட்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 1. மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் சார்ந்த முன்னெடுப்புகள் குறித்து.

2. பூத் வாரியாக மகளிர் அணி சார்பில் 10 நபர்கள் சேர்த்தல்.

3. பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை ஒவ்வொரு வாக்குச் சாவடி தோறும் தேர்வு செய்யப்படும் மகளிரைக் கொண்டு அரசின் பல்வேறு சாதனைகளை பரப்புரை செய்தல்.

4. பிப்ரவரி 1 முதல் 28 வரை சட்டப்பேரவை தொகுதி வாரியாக தெரு முனை அல்லது அரங்கக் கூட்டங்கள் நடத்துவது.

5. வருகின்ற பிப்ரவரி 14 அன்று திருப்பத்தூர் BIA2, BLC மற்றும் BDA ஆகியோருக்கு நடைபெறவிருக்கும் பயிற்சி மாநாட்டில் கலந்து கொள்வது.

6. கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப் பட்டது.

---

### செங்கம் சட்டமன்றத் தொகுதியில்

## நவீன வசதியோடு கிளை சிறைச்சாலை அமைக்கப்படுமா?

### சட்டப்பேரவையில் செங்கம் மு.பெ.கிரி கேள்வி!

**சென்னை, ஜன. 25 -**

**சட்டப்பேரவையில் மு.பெ.கிரி கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் எஸ். ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:**

**மு.பெ. கிரி:** செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செங்கம் நகரத்திலே நீதிமன்ற வளாகம் நகரத்தையொட்டி புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஏற்கெனவே இருக்கின்ற கிளைச் சிறைச்சாலை செங்கம் நகரத்தின் மையப்பகுதியிலே இருக்கிறது. அச்சிறை போக்குவரத்திற்கு நெரிசலுக்கும், பழமையான கட்டிடமாகவும் இருப்பதால், ஏற்கெனவே புதிதாக கட்டப்பட்ட நீதிமன்ற வளாகத்திலே நவீன வசதியோடு கிளைச் சிறைச்சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா ?

**அமைச்சர் எஸ்.ரகுபதி:**

ஒருகாலத்திலே நீதிமன்றத்திற்கும், சிறையிலே remand செய்யக்கூடிய குற்றவாளி களின் எண்ணிக்கைக்கும், நீதிமன்றத்திற்குப் பக்கத்திலே கிளைச் சிறைகள் தேவைப்பட்டன. ஆனால், இன்றையதினம் Video Conferencing போன்ற முறைகளிலே, இன்றைக்கு சிறையிலே remand செய்யப்படுகிற குற்றவாளிகளிகள், அதைப் போல வழக்கிற்காக ஆஜர்படுத்தப்படக்கூடிய குற்றவாளிகள் எல்லாம் காணொலிக் காட்சிகள் மூலமாகவே இன்றைக்கு ஆஜர்படுத்தப்படுகின்றனர்.



எனவே, அதனால் அரசுக்கு செலவு மிகவும் குறைவாகவே ஆகிறது. ஒரு குற்றம் செய்யப்பட்டவர் என்று கருதப்படுகின்றவரை, கிளைச் சிறை யிலேயிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதற்கு குறைந்த பட்சம் நான்கு காவலர்கள், ஒரு van தேவைப்படுகிறது.

எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் சிறைச்சாலைகள் அதிகமாகக் கொண்டு வருவதை விட, இருக்கக்கூடிய மத்திய சிறைச்சாலை களிலே அதிகமான வசதிகளைக் கொண்டுவந்து, அங்கு அதிக எண்ணிக்கையிலே சிறைவாசி களை கொண்டு வர வேண்டும் என்பது தான் இந்த அரசினுடைய நோக்கம். அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுத்து, அந்தச் சிறையிலே அவர்களை வைத்திருக்க வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றங்களைக் குறைக்க வேண்டும், அதேநேரத்தில் குற்றம் செய்தவர்களை கஷ்டப்படுத்தக்கூடாது, அதேநேரத்தில் அவர்களை Video Conference மூலம் அவர்களை நாங்கள் ஆஜர்படுத்தி விடுகிறோம்.

எனவே, புதிய நவீன கிளைச் சிறைகள் தேவையில்லை.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.


